[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 23

முற்பகல் 11–20

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)* ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)* அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. அதை முதலிலே கேட்டுவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of order ஒன்றும் கிடையாது.

திரு. சி. ஞானசேகரன்: Point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், கவன ஈர்ப்பு. *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)*

திரு. சி. ஞானசேகரன்: அவையினுடைய உறுப்பினர் ஒருவர், ஏற்கெனவே இந்த அவையிலே இருப்பதால் notice கொடுத்து இருக்க வேண்டுமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தீர்ப்பையொட்டி விவாதம் கிடையாது. *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)*

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)* திரு. கே.என். இலட்சுமணன். *(குறுக்கீடுகள்)* திரு. கே.என். இலட்சுமணன். *(குறுக்கீடுகள்)*

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் உள்நோக்கம் உடையது. ஆகவே...

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து நான்காவது முதல் இருநூற்று எண்பத்து ஒன்பதாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். *(குறுக்கீடுகள்)* *(கூச்சல்–குழப்பம்)*